**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் வருடம் ஜுலை மாதம் 14 ம் நாள் திங்கட்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**O.S.No.190/2019**

மூர்த்தி (எ) திருமூர்த்தி ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1. கூடுதல் ஆட்சியர்,
   நிலம் கையகப்படுத்துதல் அலுவலர்,
   இந்தியன் ஆயில் கார்பரேசன், திருச்சி.
2. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   இராமநாதபுரம்.
3. வட்டாட்சியர், கடலாடி. ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 26.06.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மகேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

பிராதை சீர்திருத்த ஏதுவாக மனுவில் கண்ட திருத்தங்களை அங்கீகரித்துக்கொண்டு வழக்கை மேல் நடத்தக்கோரி கட்டளை 06 விதி 17 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கானது தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியம் என விளம்புகை செய்யக்கோரியும், தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதை தடுக்கக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தில் வழக்கு தாக்கலுக்கு பின்னிட்டு பிரதிவாதிகளின் அலுவலகத்தால் தாவா சொத்தின் அடியில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் பைப்லைன் பதித்து விட்டதாகவும், தாவா சொத்தில் பைப்லைன் பதிப்பது சட்டத்தினால் அங்கீகாரம் செய்யப்பட்டிருப்பினும் கணக்கீடு செய்யப்பட்ட இழப்பீட்டு தொகையை தாவா சொத்தின் உரிமையாளரான மனுதாரருக்கு வழங்க உத்தரவிட வேண்டும் என்றும், இழப்பீட்டு தொகை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்றும், வழக்கு தாக்கல் நிலுவையில் இருக்கும்போது 1ம் பிரதிவாதியால் கேஸ் பைப்லைன் பதிக்கப்பட்டதால் அதனை அப்புறப்படுத்தி தாவா சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் கைவசம் ஒப்படைப்பதற்கு ஏதுவாக பரிகாரம் கோர வேண்டியுள்ளது என்றும், இழப்பீட்டுத் தொகையை மனுதாரருக்கே வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதற்காக பிராது பரிகாரங்களை திருத்தம் செய்ய அனுமதிக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.**

மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படுபவை தவிர மற்றவை மறுக்கப்படுகிறது என்றும், எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதாரரால் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இல்லாத பட்சத்தில் தகுந்த நஷ்ட ஈடு கோரி பிராதை சீர்திருத்தம் செய்யக்கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், கேஸ் பைப்லைன் அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ளதாகவும், அசல் வழக்கானது தாவா சொத்து அரசு புறம்போக்கு நிலமா அல்லது வாதிக்கு பாத்தியப்பட்டதா என்பது மட்டுமே என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர் மதுரை-இராமநாதபுரம்-தூத்துக்குடி வழியாக வரைபடத்தில் கண்டவாறு பைப்லைன் பதிக்க நடவடிக்கை எடுத்ததாகவும், பெட்ரோலியம் நேச்சுரல் கேஸ் பைப் லைன் சட்டத்தின்படி சிவில் நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்ய இயலாது என்பதால் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இம்மனுதாரர் அசல் வழக்கின் வாதியாவார். அசல் வழக்கு கடந்த 2019ம் ஆண்டு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்து வந்த நிலையில், வழக்கிற்கு பின்னிட்டு எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாவா சொத்தில் கேஸ் பைப் லைன் அமைக்கப்பட்டு விட்டதாகவும், அதற்கு தகுந்த இழப்பீட்டு தொகை அசல் வழக்கின் வாதியான மனுதாரருக்கு வழங்கவோ, வைப்பீடு செய்யவோ இல்லை என்றும், வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது 1ம் பிரதிவாதியால் கேஸ் பைப்லைன் பதிக்கப்பட்டதால் அதனை அப்புறப்படுத்தி தாவா சொத்தினை வாதி வசம் ஒப்படைக்கக்கோரும் விதமாக பரிகாரம் கோருவதற்கு பிராதை திருத்தம் செய்ய அனுமதிக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனத்திற்கு எதிராக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க இயலாது என்பதால் மனுவை தள்ளுபடி செய்யக்கோரி எதிர்வாதம் செய்யப்பட்டது. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது தாவா சொத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு 1ம் பிரதிவாதியால் தாவா சொத்தில் கேஸ் பைப் லைன் அமைக்கப்பட்டு விட்டதால் அதனை பொருத்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராக சுவாதின ஒப்படைப்பு பரிகாரம் கோரி பிராதை திருத்தம் செய்யக்கோரியுள்ள பரிகாரம் வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் வழங்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எவ்வித பாதிப்பும்

ஏற்படப்போவதில்லை என்பதாலும் மனுதாரர் தாக்கல் செய்த மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 14.07.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.07.14 15:22:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2025.07.14 15:22:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.